ORDINARY, MS.

Public DEPARTMENT.
G.O., DATED 26-5-90
No. 379.

*When given for copying* 2/6

[Despatch Abstract.]

Comm[illegible] to the Telugu & Tamil translators, Bd. of Rev. drawing attention to the translation of the list of drugs in the Ganjam District Gazette reports

## RATES OF CHARGE FOR INLAND TELEGRAMS.

*The Address (including name of Sender and name and residence of Addressee) is transmitted free.*

| | First 8 words. | Each additional word. | |
|---|---|---|---|
| Deferred Message ... | 8 Annas | ... 1 Anna. | A group of 3, or less figures, is reckoned as one word. |
| Ordinary „ ... | 1 Rupee | ... 2 Annas. | |
| Urgent „ ... | 2 Rupees | ... 4 Annas. | |

No charge for delivery within a distance of 5 miles.



விடச்சொல்லிக் கேட்கும்போது யாதொரு பயணக்காரன் ஒப்பிக்காவிட்டாலும் ஒப்பிக்கமாட்டேனென்றாலும் அப்படிப்பட்டவனுக்கு நூறுரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம் விதிக்கப்படும்.

XVI.—கப்பற்கீழறைக்குள்ளாவது உக்ரான அறைக்குள்ளாவது நடுத்தட்டுகளிலாவது நம்பிக்கையான மேல்விசாரணைக்குளல்லாமல் எதினிமித்தமும் திறந்தலையான விளக்கை உபயோகப்படுத்தக்கூடாது. திறந்தலையான விளக்குவைத்துக்கொண்டு ஒருவனும் படுக்கையில் வாசிக்கக்கூடாது. நடுத்தட்டுகளில் புகைகுடிப்பது கண்டிப்பாய்த் தடுக்கப்படுகிறது. கப்பற்கீழறையிலே சாராயத்தைத் திறக்கவேகூடாது; திறக்கவேண்டுமானால் தட்டுக்குமேலே கொண்டுவரவேண்டும். எவனாவது இந்த விதியை மீறிநடந்தால் அப்படிப்பட்டவனுக்கு இருநூறு ரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம் விதிக்கப்படும்.

ஜீவரட்சணைக்காகவும் ஆபத்துக்குறிகாட்டுவதற்காகவும் வேண்டிய கருவிகள்.

XVII.—அப்படிப்பட்ட பிரதி கப்பலிலும் ஒவ்வொரு கப்பலுக்கு நாலுக்குக் குறையாமல் ஜீவரட்சண போயாக்களையும், ஆபத்துக்குறிகளையும், ஜீவரட்சண போயாக்களுடன் இணைப்பதற்குத் தகுதியான அணையாத்தீபங்களையும் போதுமானவரையில் சவதரித்து வைக்கவேண்டும்.

பலவகைப்பட்டவை.

XVIII.—ஆக்ட் 18 - வது பிரிவு (4) - வது உட்பிரிவு பிரயோகப்படாத அப்படிப்பட்ட பிரதி கப்பலிலும் பயணக்காரர்களால் உபயோகிக்கப்பட்ட தட்டின் பாகமுழுவதும் தளமான ஒருபுணா கித்தானல் விதானம் போட்டிருக்கவேண்டும்.

XIX.—(1) ஆக்ட்டின் 11 - வது பிரிவு (c) குறிப்பிட்ட உடபிரிவின்படி சவதரிக்கவேண்டிய ஆகாரம், விறகு, நல்லஜலம் இவைகளோடுகூட கையிருப்பு ஔஷதமுதலிய உபகரணங்களும், தேகாரோக்கியத்தையும் சுசியையும், ஒழுங்கையுங் காப்பதற்கான அங்கங்களும், படகுகளும், நங்கூரங்களும், அமார்க்கயிறுகளும், கப்பல் யாத்திரைக்கு வேண்டிய கருவிகளும், தீயவிப்பதற்காக வேண்டியகருவிகளும், ஜீவரட்சணைக்காகவும் ஆபத்துக்குறி காட்டுவதற்காகவும் வேண்டிய கருவிகளும், பயணக்காரர்கள் தட்டின் எந்தப் பாகத்தை உபயோகிக்கிறார்களோ அந்தத் தட்டின் பாகம் விதானம் போட்டிருப்பதும், முந்தியவிதிகளின்படி ஒவ்வொரு பயணக்காரனுக்கும் மேல்தட்டில் இடம் கப்பலில் சவதரித்திருப்பதும், மேற்படி ஆக்ட் 11 - வது பிரிவின்படி சவதரிக்கப்படவேண்டிய B குறிப்பு சர்ட்டிபிகேட் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டவர் எவரோ அந்த உத்தியோகஸ்தருக்குத் திருப்திகாமாயிராதவரையில் அந்த சர்ட்டிபிகேட் கொடுக்கப்படமாட்டாது.

(2) மேற்கண்டவைகள் யாவும் அவ்வாறே சவதரிக்கப்பட்டிருக்கின்றனவென்று B குறிப்பிட்ட சர்ட்டிபிகேட்டில் கூறவேண்டும்.

---

## ஷெட்யூல் A.

[II - வது விதியின் (a) உட்பிரிவில் கண்டபடி.]

இரணவைத்தியனையுடைய யாதொரு கப்பல் சுதேச பயணக்காரர்களை "நெடும்பயணம்" ஆகக் கொண்டுபோகும்போது வேண்டிய மருந்துகளின் பிரமாணம்.

| மருந்துவகையறாக்களின் பெயர். | பயணக்காரர்கள் 100 பேருக்கும் அதற்குக் குறைந்தவர்களுக்கும். | 100 முதல் 200 பயணக்காரர்களுக்கு. | 200 முதல் 300 பயணக்காரர்களுக்கு. | 300 முதல் 400 பயணக்காரர்களுக்கு. |
|---|---|---|---|---|
| (Calomel) இரசபஸ்பம் ... | ஒன்றரை அவுன்ஸ். | இரண்டு அவுன்ஸ். | மூன்று அவுன்ஸ். | நான்கு அவுன்ஸ். |
| (Blue pill) இரச குளிகை ... | ஒரு அவுன்ஸ் ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (Rhubarb powder) ரூபார்ப் பவுடர். | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (Compound jalap powder) கம்பவுன்ட் ஜாலப் பவுடர். | ஆறு அவுன்ஸ்... | எட்டு அவுன்ஸ். | பன்னிரண்டு அவுன்ஸ். | பதினாறு அவுன்ஸ். |
| (Ipecacuanha powder) இபிகாக் குவானு பவுடர். | இரண்டு „ ... | இரண்டரை „ ... | மூன்று „ ... | மூன்றரை „ |
| (Vin. Ipecac) வைனம் இபிகாக். | ஒரு „ ... | ஒரு „ ... | ஒரு „ ... | ஒரு „ |

ஷெட்யூல் A.—தொடர்ச்சி.

| மருந்துவகையராக்களின் பெயர். | பயணக்காரர்கள் 100 பேருக்கும் அதற்குக் குறைந்தவர்களுக்கும். | 100 முதல் 200 பயணக்காரர்களுக்கு. | 200 முதல் 300 பயணக்காரர்களுக்கு. | 300 முதல் 400 பயணக்காரர்களுக்கு. |
|---|---|---|---|---|
| (Opium) அபினி ... ... | ஒரு அவுன்ஸ் ... | இரண்டு அவுன்ஸ். | மூன்று அவுன்ஸ். | நான்கு அவுன்ஸ் |
| (Dover's powder) டோவர்ஸ் பவுடர். | ஷை ... | ஒன்றரை ,, ... | இரண்டு ,, ... | மூன்று ,, |
| (Magnesia காந்தமண் பஸ்பம். | ஷை ... | இரண்டு ,, ... | மூன்று ,, ... | நான்கு ,, |
| (Epsom salts) இந்துப்பு ... | மூன்று பவுன் ... | ஆறு பவுன் ... | ஒன்பது பவுன். | பன்னிரண்டு பவுன். |
| (Tartar emetic) டார்ட்டர் இமெடிக். | இரண்டு ட்ராம். | நான்கு ட்ராம். | ஆறு ட்ராம் ... | ஒரு அவுன்ஸ். |
| (Quinine) க்வுநீன் ... ... | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸ் ... | இரண்டு அவுன்ஸ். | இரண்டரை ,, |
| (Antimonial powder) அஞ்சனக்கல் பஸ்பம். | இரண்டு ட்ராம். | நான்கு ட்ராம். | ஆறு ட்ராம் ... | ஒரு ,, |
| (Extract of colocynth comp.) ஆற்றுத்தும்மட்டிக்காய் லேகியம். | நான்கு ,, ... | ஒரு அவுன்ஸ் ... | ஒன்றரை அவுன்ஸ். | இரண்டு ,, |
| (Carbonate of ammonia) மோருகிற உப்பு. | ஒரு அவுன்ஸ் ... | ஷை ... | ஷை. ... | ஷை. |
| (Assafœtida) பெருங்காயம் ... | நான்கு ட்ராம் ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (Camphor) கர்ப்பூரம் ... | ஆறு ,, ... | ஷை. ... | ஷை ... | ஷை. |
| (Camphorated liniment) கர்ப்பூரங்கலந்த தைலம். | எட்டு அவுன்ஸ். | பன்னிரண்டு அவுன்ஸ். | பதினாறு அவுன்ஸ். | இருபது அவுன்ஸ். |
| (Catechu) காசுகட்டி ... | ஒரு ,, ... | இரண்டு ,, ... | மூன்று ,, ... | நான்கு ,, |
| (Prepared chalk) சுத்திசெய்த சீமைசுண்ணும்பு. | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (Tincture of opium) அபினித்திராவகம். | நான்கு அவுன்ஸ். | ஆறு அவுன்ஸ். | எட்டு அவுன்ஸ். | பன்னிரண்டு அவுன்ஸ். |
| (Turpentine) கர்ப்பூரத்தைலம். | எட்டு ,, ... | பன்னிரண்டு அவுன்ஸ். | ஒரு பயின்ட் ... | இருபது ,, |
| (Senna leaves) சூரத்து நிலவாகை. | நான்கு ,, ... | எட்டு ,, ... | பன்னிரண்டு அவுன்ஸ். | ஒரு பவுன். |
| (Blistering plaster) அக்கினி ப்ளாஸ்திரி. | ஷை ... | ஆறு ,, ... | எட்டு ,, ... | பன்னிரண்டு அவுன்ஸ். |
| (Sulphur sublimed) சுத்திசெய்த கெந்தகம். | எட்டு அவுன்ஸ். | பத்து ,, ... | பன்னிரண்டு அவுன்ஸ். | ஒரு பவுன். |
| (Sulphur ointment) கந்தக திராவகம். | ஆறு ,, ... | எட்டு ,, ... | ஷை ... | ஷை. |
| (Linseed flour) ஆளிவிரைத்தூள். | இரண்டு பவுன். | நான்கு பவுன். | ஆறு பவுன் ... | எட்டு பவுன். |
| (Country soap) நாட்டு சப்பு. | பன்னிரண்டு அவுன்ஸ். | ஒன்றரை ,, ... | இரண்டு ,, ... | மூன்று ,, |
| (Castor-oil) ஆமணக்கெண்ணெய். | மூன்று புட்டி ... | ஆறு புட்டி ... | எட்டு புட்டி ... | பன்னிரண்டு புட்டி. |
| (Oil of peppermint) பெப்பர்மின்ட் எண்ணெய். | ஒரு அவுன்ஸ் ... | இரண்டு அவுன்ஸ் | இரண்டு அவுன்ஸ். | இரண்டு அவுன்ஸ். |
| (Adhesive plaster [spread]) துணியில் (தடவி) இருக்கும் ஒட்டு ப்ளாஸ்திரி. | ஒரு கெஜம் ... | இரண்டு கெஜம். | இரண்டு கெஜம். | இரண்டு கெஜம். |
| (Simple ointment) வெள்ளை ப்ளாஸ்திரி. | எட்டு அவுன்ஸ். | பன்னிரண்டு அவுன்ஸ் | ஒரு பவுன் ... | ஒன்றரை பவுன். |
| (Ringworm ointment) எச்சைத்தழும்பு தைலம். | ஷை ... | ஷை ... | ஷை. ... | ஒன்றேகால் ,, |
| (Chlorodyne) வாந்திபேதி சஞ்சீவி. | இரண்டு அவுன்ஸ். | இரண்டு அவுன்ஸ். | மூன்று அவுன்ஸ். | மூன்றுஅவுன்ஸ். |
| (Chloroform) க்ளோரபாரம். | ஒரு ,, ... | ஒரு ,, ... | இரண்டு ,, ... | இரண்டு ,, |
| (Aromatic spirit of hartshorn) ஆரோமாடிக் ஸ்பிரிட் ஆவ் ஹார்ட்ஷாரன். | இரண்டு ,, ... | மூன்று ,, ... | மூன்று ,, ... | மூன்று ,, |
| (Cholera pills in phial) வாந்திபேதி மாத்திரைகள் புட்டியிலே. | ஆறு டஜன் ... | ஆறு டஜன் ... | ஆறு டஜன் ... | ஆறு டஜன். |
| (Sweet spirit of nitre) பொட்டிலுப்புத் தைலம். | எட்டு அவுன்ஸ். | ஒரு பவுன் ... | ஒரு பவுன் ... | ஒரு பவுன். |



ஷெட்யூல் A.—தொடர்ச்சி.

| மருந்துவகையராக்களின் பெயர். | பயணக்காரர்கள் 100 பேருக்கும் அதற்குக் குறைந்தவர்களுக்கும். | 100 முதல் 200 பயணக்காரர்களுக்கு. | 200 முதல் 300 பயணக்காரர்களுக்கு. | 300 முதல் 400 பயணக்காரர்களுக்கு. |
|---|---|---|---|---|
| (Sulphate of copper) மயில்துத்தம். | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸ். |
| (Sulphate of zinc) வெள்ளைத்துத்தநாக உப்பு. | அரை ,, ... | அரை ,, ... | அரை ,, ... | அரை ,, |
| (Zinc oxide ointment) வெள்ளைத் துத்தநாகத் தைலம். | ஒரு ,, ... | ஒரு ,, ... | ஒரு ,, ... | ஒரு ,, |
| (Lunar caustic) வெள்ளிகாடிகாரம். | இரண்டு ட்ராம். | மூன்று ட்ராம். | நான்கு ட்ராம். | நான்கு ட்ராம். |
| (Hydrarg. cum creta) இரசமும் சீமைசுண்ணும்பும் சேர்ந்த பஸ்பம். | ஷை ... | ஷை ... | ஷை ... | ஆறு ,, |
| (Plumbi acetas) ஈயபஸ்பம் ... | நான்கு ட்ராம் ... | ஆறு ட்ராம் ... | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸும் இரண்டு ட்ராமும். |
| (Pulvis acaciæ) சீமை விளாம்பிசினி பஸ்பம். | இரண்டு அவுன்ஸ். | மூன்று அவுன்ஸ். | நான்கு ,, ... | ஆறு அவுன்ஸ். |
| (Pulvis cretæ cum opio) சீமை சுண்ணும்பும் அபினியும் சேர்ந்த பஸ்பம். | நான்கு ட்ராம் ... | ஆறு ட்ராம் ... | ஒரு ,, ... | ஒரு அவுன்ஸும் இரண்டு ட்ராமும். |
| (Acid, sulphuric dil.) நீர்விட்டுவிளாவின கெந்தக திராவகம். | ஒரு அவுன்ஸ் ... | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு ,, ... | இரண்டு அவுன்ஸும் நான்கு ட்ராமும். |
| (Acid, tartaric) கிச்சிலிப்பழ உப்பு. | ஆறு ட்ராம் ... | ஒரு அவுன்ஸும் இரண்டு ட்ராமும். | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு அவுன்ஸ். |
| (Tinct. camp. comp.) கர்ப்பூரத்திராவகக்கூட்டு. | மூன்று அவுன்ஸ் | நான்கு அவுன்ஸ். | ஆறு அவுன்ஸ். | எட்டு ,, |
| (Tinct. ferri sesquichl.) அயத்திராவகம். | ஒரு ,, ... | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு ,, ... | மூன்று ,, |
| (Sodæ sesquicarb) சுத்திசெய்த அப்பளாகாரம். | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு அவுன்ஸ். | மூன்று ,, ... | நான்கு ,, |
| (Chloride of zinc Burnett's solution) குளோராட் ஆவ் ஸின்க் (பர்னட்ஸ் ஸொலியூஷன்). | 2 க்வார்ட் ... | 3 க்வார்ட் ... | 4 க்வார்ட் ... | 5 க்வார்ட். |
| அல்லது | | | | |
| (Jeyes' perfect purifier [liquid]) பூர்த்தியாய்ச் சுத்திசெய்யத்தக்க ஜேஸ் பியூரிபையர் (நீர்மயமானது). | 1 காலன் ... | 1 காலன் ... | 2 காலன் ... | 2 காலன். |
| (Acid, carbolic) * கார்பாலிக் ஆஸிட் அல்லது (Jeyes' sanitary powder) சுகாதாரத்திற்கேற்ற ஜேஸ் பவுடர். | 1 ஹண்ட்ரட்ஸ்வெயிட். | $1\frac{1}{2}$ ஹண்ட்ரட்ஸ் வெயிட். | 2 ஹண்ட்ரட்ஸ் வெயிட். | $2\frac{1}{2}$ ஹண்ட்ரட்ஸ் வெயிட். |
| கருவிகள். | | | | |
| (1 அவுன்ஸ்) அளவை க்ளாஸ். | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| (துளி) அளவை க்ளாஸ் ... | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (பீங்கான்) குழவியும் கல்வமும். | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| தராசுபடிக்கட்டு (க்ரெயின் அளவு). | ஒருஜதை ... | ஒருஜதை ... | ஒருஜதை ... | ஒருஜதை. |
| (சாமானிய) மரச்சட்டம் ... | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |

* சுத்த கார்பாலிக் ஆஸிடாவது கிரஸ்லிக் ஆஸிடாவது நூற்றில் இருபதுபங்குக்குக் குறையாததுள். பயணக்காரக்கப்பல் போகவேண்டியதாயிருக்கிற பயணமானது இந்தியாவிலுள்ள யாதொரு ரேவிலிருந்து ரெட்ஸீயிலுள்ள யாதொரு ரேவுக்குப் போவதைப்பார்க்கிலும் அதிக தூரமாயிருந்தால், மேற்கண்ட மருந்துகளை விசேஷமாய் நூற்றுக்கு 25 வீத அளவுக்குக் கொண்டுபோகவேண்டும்.

2

ஷெட்யூல் B.—தொடர்ச்சி.

| மருந்துவகையராக்களின் பெயர். | பயணக்காரர்கள் 100 பேருக்கும் அதற்குக் குறைந்தவர்களுக்கும். | 100 முதல் 200 பயணக்காரர்களுக்கு. | 200 முதல் 300 பயணக்காரர்களுக்கு. | 300 முதல் 400 பயணக்காரர்களுக்கு. |
|---|---|---|---|---|
| (Acid, tartaric) இச்சிலிப்பழ உப்பு. | ஆறு ட்ராம் ... | ஒரு அவுன்ஸும் இரண்டு ட்ராமும். | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு அவுன்ஸ். |
| (Tinct. camp. comp.) கர்ப்பூர திராவகக் கம்பவுண்ட் | மூன்று அவுன்ஸ். | நான்கு அவுன்ஸ். | ஆறு அவுன்ஸ்... | எட்டு ,, |
| (Sodæ sesquicarb.) சுத்திசெய்த அப்பளாகாரம். | ஒரு அவுன்ஸும் நான்கு ட்ராமும். | இரண்டு ,, ... | மூன்று ,, ... | நான்கு ,, |
| (Chloride of zinc [Burnett's solution]) குளோரட் ஆவ் ஜிங்க் (பர்னட்ஸ் ஸொல்யூஷன்) | 2 க்வார்ட் ... | 3 க்வார்ட் ... | 4 க்வார்ட் ... | 5 க்வார்ட். |
| அல்லது (Jeyes' perfect purifier [liquid]) பூர்த்தியாய்ச் சுத்தி செய்யத்தக்க ஜேஸ் பியூரிபையர் (நீர்மயமானது.) | 1 காலன் ... | 1 காலன் ... | 2 காலன் ... | 2 காலன். |
| (Acid, carbolic) *கார்பாலிக் ஆஸிட் அல்லது (Jeyes' sanitary powder) சுகாதாரத்திற்கேற்ற ஜேஸ் பவுடர். | 1 ஹண்ட்ரட் வெயிட். | 1½ ஹண்ட்ரட் வெயிட். | 2 ஹண்ட்ரட்வெயிட். | 2½ ஹண்ட்ரட் வெயிட். |
| **கருவிகள்.** | | | | |
| (1 அவுன்ஸ்) அளவை க்ளாஸ். | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| (ஞ்ளி) அளவை க்ளாஸ் ... | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (பீங்கான்) குழவியும் கல்வமும். | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| தராசுபடிக்கட்டு (க்ரெயின் அளவு) | ஒரு ஜதை ... | ஒரு ஜதை ... | ஒரு ஜதை ... | ஒரு ஜதை. |
| (சாமானிய) மரச்சட்டம் ... | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| (பக்குவஞ்செய்த) பஞ்சு ... | இரண்டு அவுன்ஸ். | மூன்று அவுன்ஸ். ... | நான்கு அவுன்ஸ். | ஆறு அவுன்ஸ். |
| காயக்கட்டு கட்டுவதற்குச் சீலை. | ஒரு துண்டு ... | இரண்டு துண்டு. | இரண்டு துண்டு. | இரண்டு துண்டு. |
| (நடு அளவு) சிறுநீர்த்தாரை வெள்ளிசிலாகை. | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| (ஏற்ற பிரமாணமுள்ள) பிசினியால்செய்த நெகிழ்ந்து நழுத்தக்க சிறுநீர்த்தாரை சிலாகை. | ஆறு ... | ஆறு ... | ஆறு ... | ஆறு. |
| கீறிகைசெய்யும் கத்தி ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| இரணவைத்திய சம்பந்தமான கத்தரிக்கோல். | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| வியாழப்பாண்டங்கள் ... | ஷை ... | இரண்டு ... | இரண்டு ... | இரண்டு. |
| படுக்கையிலேயே மலம் ஜலம் கழிப்பதற்கான (உலோகத்தாற்செய்த) ஏனங்கள். | இரண்டு ... | ஷை ... | மூன்று ... | மூன்று. |
| நாட்டுக்கடுதாசி ... ... | ஒரு க்வயர் ... | ஒரு க்வயர் ... | இரண்டு க்வயர். | இரண்டு க்வயர். |
| பேனாகத்தி ... ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| சவ்வரிசி ... ... | ஐந்து பவுன் ... | பத்து பவுன் ... | பதினைந்து பவுன் | இருபது பவுன். |
| அரரூட்மாவு ... ... | பத்து ,, ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| சிறிய தகரப்பெட்டி... ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று ... | ஒன்று. |
| ஆசனவழியாய் ஆகாரத்தையோ மருந்தையோ பிரயோகிக்கச்செய்யுங் கருவி. | ஷை ... | ஷை ... | ஷை ... | ஷை. |
| பற்பிடுங்கு கருவிகள் ... | ஒரு ஜதை ... | ஒரு ஜதை ... | ஒரு ஜதை ... | ஒரு ஜதை. |

* சுத்த கார்பாலிக் ஆஸிடாவது கிரஸலிக் ஆஸிடாவது நூற்றில் இருபதுபங்குக்குக் குறையாதது.

பயணக்காரக்கப்பல் போகவேண்டியதாயிருக்கிற பயணமானது இந்தியாவிலுள்ள யாதொரு ரேவிலிருந்து ரெட்ஸீயிலுள்ள யாதொரு ரேவுக்குப் போவதைப்பார்க்கிலும் அதிகதூரமாயிருந்தால், மேற்கண்ட மருந்துகளை விசேஷமாய் நூற்றுக்கு 25 வீத அளவுக்குக் கொண்டுபோகவேண்டும்.



ஷெட்யூல் C.

[II - வது விதியில் (b) உட்பிரிவில் கண்டபடி.]

யாதொரு கப்பல் சுதேச பயணக்காரர்களை "குறுகியபயணம்" ஆகக் கொண்டுபோகும்போது வேண்டிய மருந்துகளின் அளவும், இரணவயித்திய உபகரண வகையராக்களும்.

| | |
|---|---|
| (Aperient pills) பேதிமாத்திரை... | 3 டஜன். |
| (Common astringent pills) பேதிகட்டுமாத்திரை ... ... | 3 ,, |
| (Cholera pills) வாந்திபேதி மாத்திரை ... ... ... | 6 ,, |
| (Ipecacuanha powder) இபிகாக்குவானா பவுடர் ... ... | 1 அவுன்ஸ். |
| (Quinine) க்வினீன் ... ... | 1 ,, |
| (Castor-oil) ஆமணக்கெண்ணெய். | 2 புட்டி. |
| (Compound jalap) கம்பவுண்ட் ஜாலப் ... ... ... | 1 அவுன்ஸ். |
| (Adhesive plaster (spread)) (துணியில் தடவியிருக்கும்) ஒட்டுப் ளாஸ்திரி ... ... ... | 1 கெஜம். |
| (Oil of peppermint) பெப்பர்மின்ட் எண்ணெய் ... ... | 1 அவுன்ஸ். |
| தராசு படிக்கட்டு ... ... | 1 ஜதை. |
| சாதாரண மரச்சட்டம் .. ... | 1 ,, |

தொத்துவியாதியைப் பரவவொட்டாமல் தடுக்கிற தூளும் திராவகமும் B குறிப்பு ஷெட்யூலில் கண்டிருக்கிறவைகளாயும் அந்த ஷெட்யூல் இரண்டாவதுகலத்தில் கண்டிருக்கிற அளவுக்கு மிருக்கவேண்டும்.

---

1355 - ம் நம்பர்.—1887ஹ்த்து 10 - வது சுதேச பயணக்காரக் கப்பலாக்ட் 55 - வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதினிமித்தமும், அடியிற்கண்டிருப்பனவாகிய :—

பைனான்ஸ், காமர்ஸ் டிபார்ட்மென்ட்—

1882ஹ் மேமீ 26உ 1366-ம் நம்பர்,

1882ஹ் ஜனவரிமீ 20உ 359-ம் நம்பர்,

1884ஹ் மேமீ 9உ 854-ம் நம்பர் விளம்பரங்களை ரத்துசெய்வதினிமித்தமும், ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் களிகூர்ந்து நிர்ணயிக்கிற தென்னவென்றால்—

I.—மேற்படி ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களின்பொருட்டு, அடியில்வரும் ஷெட்யூல் இரண்டாவதுகலத்தில் கண்டிருக்கிற ரிதுக்களை அந்த ஷெட்யூல் மூன்றாவதுகலத்தில் கண்டிருக்கிறபடி அந்த ஷெட்யூல் முதலாவது கலத்தில் அவற்றிற்கு நேராக அததற்கு உரித்தாய்க் கண்டிருக்கிற கடலோரங்களில் "காற்று மழையில்லாத ரிதுக்களாகவும்" "காற்று மழையுள்ள ரிதுக்களாகவும்" கொள்ளவேண்டும்:—

ஷெட்யூல்.

| 1 - வது கலம். கடலோரங்கள். | 2 - வது கலம். ரிதுக்கள். | 3 - வது கலம். காற்றுமழையில்லாத அல்லது காற்றுமழையுள்ள ரிது. |
|---|---|---|
| (1) ஸிண்ட், பாம்பே, மலபார் (தெற்கே கார்வார் வரையில்). | ஜனவரிமீ 1உ முதல் மேமீ 15உ வரைக்கும் ... ... | காற்றுமழையில்லாத. |
| | மேமீ 16உ முதல் ஆகஸ்ட்மீ 31உ வரைக்கும் ... ... | காற்றுமழையுள்ள. |
| | செப்டெம்பர்மீ 1உ முதல் டிஸெம்பர்மீ 31உ வரைக்கும் ... | காற்றுமழையில்லாத. |
| (2) (கார்வாருக்குத் தெற்கிலுள்ள) மேற்கு இந்தியா. | ஜனவரிமீ 1உ முதல் மேமீ 15உ வரைக்கும் ... ... | காற்றுமழையில்லாத. |
| | மேமீ 16உ முதல் செப்டெம்பர்மீ 15உ வரைக்கும் ... | காற்றுமழையுள்ள. |
| | செப்டெம்பர்மீ 16உ முதல் டிஸெம்பர்மீ 31உ வரைக்கும் ... | காற்றுமழையில்லாத. |
| (3) ஸிலோன் (மனார் குடாக்கடல்). | ஜனவரிமீ 1உ முதல் எப்ரல்மீ 15உ வரைக்கும் ... ... | காற்றுமழையில்லாத. |
| | எப்ரல்மீ 16உ முதல் ஆகஸ்ட்மீ 31உ வரைக்கும் ... ... | காற்றுமழையுள்ள. |
| | செப்டெம்பர்மீ 1உ முதல் அக்டோபர்மீ 31உ வரைக்கும் ... | காற்றுமழையில்லாத. |
| | நவம்பர்மீ 1உ முதல் டிஸெம்பர்மீ 31உ வரைக்கும் ... ... | காற்றுமழையுள்ள. |
| | குறிப்பு.—தேவிபட்டணத்துக்கும் பிசாலைக்கும் இடையிலுள்ள ரேவுகளுக்கும், பாம்பனுக்கும் வெனெகாலைக்கும் இடையிலுள்ள ரேவுகளுக்கும் போய்வந்துகொண்டிருக்கிற கப்பல்கள் தென்மேற்குப் பருவக்காற்றில் ஆடம்ஸ் பிரிட்ஜுக்கு வடக்காகவும், வடகிழக்குப் பருவக்காற்றில் அதற்குத் தெற்காகவும் செல்லுமானால் அவைகளுக்கு வருஷமுழுவதும் காற்றுமழையில்லாத ரிதுவென்றே கொள்ளவேண்டும். | |

(a) ஒவ்வொரு பயணக்காரனுக்கும் நடுத்தட்டுகளில் குறைந்தது 5 - சதுர அடி விசாலத்திற்கும் 30 - கன அடியுமுள்ள இடம் இருக்கவேண்டும்; ஆனால் காற்றுமழைக்கு அடைப்பாக உறுதியான சுற்றுப்பலகையும் இரட்டைவிதானமுமுடைய வசதியாவது வேறே தகுந்த காப்பிடமாவது கப்பல்களில் சவதரித்திருக்கவேண்டும்; அன்றியும் மேல்தட்டிலும் நடுத்தட்டுகளிலும் பயணக்காரர்கள்தங்க முழுவதும் வசதியாயிருக்கவேண்டும்; அல்லது

(b) செப்டெம்பர்மீ 1உ முதல் ஏப்ரல்மீ 30உ வரையிலுள்ள நாள்களிலே பயணங்கள் செய்கிறவிஷயத்தில், முறையே காற்றுமழை யில்லாத ரிதுவிலும் காற்றுமழையுள்ள ரிதுவிலும் நீராவியால் இயக்கப்பட்ட கப்பல்கள் செய்யும் பயணங்களுக்கு இந்த ஆக்ட் 18 - வது பிரிவிற்சொல்லிய அளவுபடி இடமிருக்கவேண்டும்.

இ. ஜெ. லின்கின்ஸன்,
இந்திய கவர்ன்மெண்ட் அபிஷியேட்டிங்
ஸெக்ரெடெரி.

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.



## GOVERNMENT OF INDIA NOTIFICATION.

### DEPARTMENT OF FINANCE AND COMMERCE.

NOTIFICATIONS.

STATISTICS AND COMMERCE—COMMERCE AND TRADE—MERCHANT SHIPPING.

*The 14th March* 1889.

### RULES UNDER THE NATIVE PASSENGER SHIPS ACT, X OF 1887.

### 1887ஃஸ்த்திய 10-வது சுதேசபயணக்கார கப்பலாக்ட்டின்படிக்கான விதிகள்.

1353-ம் நெம்பர்.—1887ஃஸ்த்து 10 - வது சுதேசபயணக்கார கப்பலாக்ட் 20 - வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதினிமித்தமும், அடியிற்கண்டிருப்பனவாகிய,—

ரெவினியூ, அக்ரிகல்சர், காமர்ஸ் டிபார்ட்மெண்ட்—

1877ஃஸ் அக்டோபர்மீ 5உ 392-ம் நம்பர்,
1877ஃஸ் அக்டோபர்மீ 5உ 394-ம் நம்பர்,
1877ஃஸ் அக்டோபர்மீ 5உ 396-ம் நம்பர்,
1877ஃஸ் டிசம்பர்மீ 12உ 493-ம் நம்பர்,
1878ஃஸ் ஆகஸ்ட்மீ 20உ 447-ம் நம்பர்;

விளம்பரங்களை ரத்துசெய்வதினிமித்தமும், ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் - பயணம்போகையில் இறந்துபோகிற ஒவ்வொருபயணக்காரனுக்கும் மரணம் நேரிட்ட தேதியையும் என்னகாரணத்தினால் அவனுக்கு மரணம் நேரிட்டிருக்கலாமென்று தோற்றுகிறதோ அதையும், அந்தபிரிவில் சொல்லியிருக்கிறபடி கப்பல்களின்மாஸ்டர்கள் தெரிவிப்பதற்காக அடியிற்கண்ட உத்தியோகஸ்தர்களைக் களிகூர்ந்து நியமிக்கிறார்கள்:—

சென்னபட்டணம் ப்ரொஸிடென்ஸியில்.

| ரேவுகளின்பெயர். | நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள். |
|---|---|
| கெஞ்ஜாம் | ரேவு கன்ஸெர்வேட்டர். |
| கலிங்கபட்டணம் | ஷை |
| கூடலூர் | ஷை |
| போர்டோநோவோ (பாங்கிப்பேட்டை) | ஷை |
| தரங்கம்பாடி | ஷை |
| தலைச்சேரி | ஷை |
| கன்னனூர் | ஷை |
| மங்களூர் | ஷை |
| கோபாலபுரம் | ரேவு உத்தியோகஸ்தர். |
| பிமிலிபட்டணம் | ஷை |
| விசாகபட்டணம் | ஷை |
| காகனடா | ஷை |
| மஸலிபட்டணம் | ஷை |
| நாகபட்டணம் | ஷை |
| பாம்பன் | ஷை |
| தூத்துக்குடி | ஷை |
| கொச்சின் | ஷை |
| கள்ளிக்கோட்டை | ஷை |
| சென்னபட்டணம் | சென்னபட்டணம்ரேவு டெப்யுடி கன்ஸெர்வேட்டர். |
| நரசாபுரம் | ஸீ கஸ்டம்ஸ் ஸூப்ரின்டென்டெண்ட். |
| மூத்துப்பேட்டை | ஷை ஷை |

| ரேவுகளின்பெயர். | நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள். |
| --- | --- |
| தோப்புத்துறை ... ... ... | ஸீ கஸ்டம்ஸ் அஸிஸ்டன்ட் ஸுபரின்டென்டென்ட். |
| அதிராமபட்டணம் ... ... | ஷை ஷை |
| கிழக்கரை ... ... ... | ஷை ஷை |
| தொண்டி ... ... ... | ஷை ஷை |
| தேவிபட்டணம் ... ... ... | ஷை ஷை |
| கோவிந்தபட்டணம் ... ... | ஷை ஷை |
| குலசேகரபுரம் ... ... ... | ஷை ஷை |
| பொன்னாணி ... ... ... | ஷை ஷை |
| பரவை ... ... ... | ஷை ஷை |
| * * | * * |

1364-ம் நம்பர்.—1887ஹு த்து 10-வது சுதேசபயணக்கார கப்பலாக்ட் 53-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதினிமித்தமும், அடியில் கண்டிருப்பனவாகிய,—

ரெவினியூ, ஆக்ரிகல்சர், காமர்ஸ் டிபார்ட்மென்ட்—

1877ஹு ஆகஸ்ட்மீ 8உ 298-ம் நம்பர்,

1878ஹு செப்டெம்பர்மீ 20உ 502-ம் நம்பர்,

1878ஹு நவம்பர்மீ 8உ 546-ம் நம்பர்;

பைனான்ஸ், காமர்ஸ் டிபார்ட்மென்ட்—

1879ஹு டிசம்பர்மீ 20உ 2032-ம் நம்பர்;

ஹோம் டிபார்ட்மென்ட்—

1882ஹு ஏப்ரல்மீ 27உ 112-ம் நம்பர்,

1882ஹு ஜுலைமீ 19உ 220-ம் நம்பர்;

பைனான்ஸ், காமர்ஸ் டிபார்ட்மென்ட்—

1882ஹு ஜுன்மீ 23உ 1822-ம் நம்பர்,

1883ஹு ஏப்ரல்மீ 6உ 142-ம் நம்பர்,

1883ஹு செப்டெம்பர்மீ 19உ 3290-ம் நம்பர்,

1886ஹு பிப்ரவரிமீ 5உ 584-ம் நம்பர்;

விளம்பரங்களை ரத்துசெய்வதினிமித்தமும், ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்கள் கனிகூர்ந்து செய்கிறவிதிகளென்னவென்றால்:—

[குறிப்பு.—இந்தியாவிலிருந்து (Red sea) ரெட்ஸீயிலுள்ள ரேவுகளுக்கும் அந்தரேவுகளிலிருந்து இந்தியாவுக்கும் யாத்திரைசெய்யும் தேசாந்திரிகளைக்குறித்து பைனான்ஸ்-காமர்ஸ் டிபார்ட்மென்ட் 1884ஹு பிப்ரவரிமீ 15உ 986-ம் நம்பர் விளம்பரத்திற்கண்ட விதிகளாகிலும் மேற்படி தேசாந்திரிகளின் யாத்திரையைக்குறித்து மேற்கண்ட விளம்பரத்தைத் திருத்தி ஜாரிசெய்யப்பட்ட பின்னையவேறே எந்தவிளம்பரங்களாகிலும் விதிகளாகிலும் அடியிற்கண்ட விதிகளினால் திருத்தப்படவுமாட்டா, பாதிக்கப்படவுமாட்டா.]

A.—போஜனபதார்த்தம், எரிகரும்பு, தண்ணீர்.

I.—(1) மேற்படி ஆக்ட் சம்பந்தப்படுகிற பிரதிகப்பல்விஷயத்திலும், பயணக்காரர்களுக்குள் நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கு போஜனபதார்த்தமும், எரிகரும்பும் தண்ணீரும் சவதரிக்கவேண்டியவிதமானது - போஜனபதார்த்தத்தைக்குறித்து அந்த ஆக்ட் 17-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அடியிற்கண்டபடி யிருக்கவேண்டியது; அதாவது:—

| — | 48-மணிநேரத்துச் சபருக்கள்போய்ச்சேரும் ரேவுகளுக்குச் செல்லும்பயணக்காரர்களுக்கு. | 48-மணிநேரத்துச் சபருக்கு மேற்பட்டுப்போய்ச்சேருகிற ரேவுகளுக்குச்செல்லும் பயணக்காரர்களுக்கு. |
| --- | --- | --- |
| (a) பக்குவமானகுணமுள்ள போஜனபதார்த்தம்— | | |
| அரிசி ... ... ... ... ... | 1 பவுன். | 1 பவுன். |
| மா அல்லது கப்பல்பிஸ்கோத் ... ... | ...... | 4 அவுன்ஸ். |
| பயறு ... ... ... ... ... | 4 அவுன்ஸ். | 4 அவுன்ஸ். |
| நெய் அல்லது எண்ணெய் ... ... ... | ½ அவுன்ஸ். | 1 அவுன்ஸ். |
| வெங்காயம் ... ... ... ... ... | 2 அவுன்ஸ். | 2 அவுன்ஸ். |
| பூசனிக்காய், ஈயாமுச்சிக்கிழங்கு அல்லது வேறே காய்கறிபதார்த்தம். | ...... | 2 அவுன்ஸ். |
| புளி ... ... ... ... ... | ...... | 1 அவுன்ஸ். |
| மசாலா (மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, மஞ்சள்). | ½ அவுன்ஸ். | ½ அவுன்ஸ். |
| உப்பு ... ... ... ... ... | ½ அவுன்ஸ். | ½ அவுன்ஸ். |
| (b) எரிகரும்பு— | | |
| விறகு ... ... ... ... ... | 2 பவுன். | 2 பவுன். |
| (c) தண்ணீர்— | | |
| இருப்புத்தொட்டிகளிலாவது புதப்பீப்பாய்களிலாவதுவார்த்து வைக்கவேண்டிய நல்லஜலம். | 1 இம்பீரியல் காலன். | 1 இம்பீரியல் காலன். |

[குறிப்பு.—சென்னபட்டணம் பிரெஸிடென்ஸியிலுள்ள ரேவுகளிலிருந்து செல்லும் கப்பல்கள் விஷயத்தில், புளி, மசாலா, உப்பு இவற்றின் வீதமானது மேலேகண்டிருக்கிறதற்கு இரட்டிப்பாயிருக்கவேண்டியது; 40 மணிநேரத்துச் சபருக்குள்போய்ச்சேருகிற ரேவுகளுக்குச்செல்லும் பயணக்காரர்கள்விஷயத்திலே ஒரு அவுன்ஸ்புளி சவதரிக்கவேண்டியது.]



(2) உப்புத்தண்ணீரைக்காய்ச்சி நல்லஜலமாக வடிப்பதற்கேற்றகருவி அமைத்திருக்கும் நீராவிக்கப்பல்கள் விஷயத்தில், நாள் ஒன்றுக்கு ஒரு ஆளுக்கு ஒருகாலனிலே ஏழில் ஐந்துபங்குஜலம் சவதரிப்பதுபோதும்.

(3) கல்கட்டாவிலும், பம்பாயிலும், ரங்கூனிலும் அப்படிப்பட்ட தண்ணீர் மியுனிஸிபல் குழாய்களினின்றும், சிட்டகாங்கில் ரேவுஜல குத்திரங்களினின்றும் பெற்றுக்கொள்ளவேண்டியது.

B.—தேகாரோக்கியத்தையும், சுசியையும், ஒழுங்கினையுங் காப்பதற்கான கைவிருப்பு ஔஷதமுதலிய உபகரணங்களும் முஸ்தீதுகளும்.

II.—(1) அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் வைத்திருக்கவேண்டியதாவது,—

(a) அப்படிப்பட்ட கப்பலில் ஸர்ஜன் இருப்பாராகில், இதனோடு சேர்க்கப்பட்ட A குறிப்பு ஷெடியூலில் கண்டிருக்கிற அளவுக்கு ஔஷதங்களும் இரணவைத்தியக்கருவிகளும்;

(b) அப்படிப்பட்ட கப்பலில் ஸர்ஜன் இல்லாவிட்டால், இதனோடு சேர்க்கப்பட்ட B குறிப்பு ஷெடியூலில் கண்டிருக்கிற அளவுக்கு ஔஷதங்களும் கருவிகளும்; அவற்றோடுகூட, அந்தக்கப்பலின் கமான்டராவது வேறே எந்த உத்தியோகஸ்தராவது படிக்கக்கூடியபாஷையிலே அவற்றை இன்னபடி உபயோகிக்கவேண்டுமென்பதைக்குறித்து எழுதியாகிலும் அச்சிட்டாகிலுமிருக்கிற முறைகளும்; ஆனால் அப்படிப்பட்ட கப்பலானது மேற்படி ஆக்ட் 5-வது பிரிவில் விவரித்துச்சொல்லியிருக்கிறபடி குறுகியபயணம் போவதாகமாத்திரமிருந்தால், இதனோடு சேர்க்கப்பட்ட C குறிப்பு ஷெடியூலில் கண்டிருக்கிற ஔஷதங்களும் இரணவைத்தியக்கருவிகளுமாத்திரம் அந்தக்கப்பலிலிருக்கவேண்டும்.

(2) மேலேகண்டிருக்கிற ஔஷதங்களும் இரணவைத்தியக்கருவிகளும் வேண்டியிருக்கும் சந்தர்ப்பங்கள் நேரிடும்போதெல்லாம் பயணக்காரர்களுக்கு உபயோகப்படுவதற்காகச் சவதரிக்கவேண்டியது; வைத்திய உத்தியோகஸ்தராவது, வைத்திய உத்தியோகஸ்தர் இல்லாதபட்சத்தில், கப்பலின்மாஸ்டராவது, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேரிடும்போது, அவற்றைச்சவதரிக்கத் தவறுவாராகில் அவர் இருநூறுரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம் விதிக்கப்படுவார்.

III.—(1) ஆக்டில் விவரித்துச்சொல்லியிருக்கிறபடி நூறுபேருக்கு அதிகமாகப் பயணக்காரர்களை ஏற்றிக்கொண்டுபோகிற அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் பயணக்காரர்களுக்காக அடியிற்கண்டிருக்கிறபடி ஆஸ்பத்திரிவிடுதியாவது ஆஸ்பத்திரிவிடுதி ஏற்படுத்துவதற்கான அடியிற்கண்டிருக்கிற சாமான்களாவது சித்தமாயிருக்கவேண்டியது:—

A.—நெடும்பயணம்போகும் கப்பல்கள் விஷயத்தில்.

(a) மேல்தட்டிலே பின்னணியிலாவது டெக் அவுஸிலாவது பிரத்தியேகமாய் ஒரு ஆஸ்பத்திரியைச் சித்தஞ்செய்து நிலையாய்வைத்திருக்கவேண்டியது. இந்த ஆஸ்பத்திரியில் உட்காருவதற்கும் படுத்துக்கொள்ளுவதற்குமான விசைப்பலகைகள் ஆறுக்கதிகமாயிருக்கக்கூடாது, மேலும் இந்த ஆஸ்பத்திரியில் மேல்தட்டின் விஸ்தீரணம் குறைந்தது 144 அடியும் வெளிவிசாலம் 864 கனவடியும் இருக்கவேண்டியது. இந்த ஆஸ்பத்திரி சர்வேசெய்கிற உத்தியோகஸ்தருக்கு திருப்திகரமாகும்படி வெளிச்சமும் காற்றும் பாவுவதாயிருக்கவேண்டியது, தட்டுக்குமேலே குறைந்தது நாலு அங்குல உயரத்துக்கு மேடை ஏற்படுத்தியிருக்கவேண்டியது. நிலையான பிரதி ஆஸ்பத்திரியும் வேறே யாதொரு டெக் அவுஸைப்போல அவ்வளவு பத்திரமுள்ளதாயிருக்கவேண்டியது, மேற்கூரையை ஜலம்கசியவொட்டாமல் தார்முதலியவற்றைக்கொண்டு நன்றாய்ப்பூசி, வர்ணம்பூசியகித்தானால் மூடிவைக்கவேண்டியது. அப்படிப்பட்ட நிலையான ஆஸ்பத்திரிகளிலெல்லாம், மரச்சட்டங்களைக்காட்டிலும் இருப்புச்சட்டங்களே சிறந்தன. வைசூரியாவாவது, வாந்திபேதி-தேகம் மஞ்சளாய்ப்போகத்தக்க (yellow fever) ஓர்வகைசுரம், அல்லது பெருவாரி இந்தவியாதிகளுக்கு எந்தக்காரணத்தைப்பற்றியாவது நிலையான ஆஸ்பத்திரியில் வைத்தியஞ்செய்யக்கூடாது.

(b) பிரத்தியேகமாய்வைப்பது யுக்தமாக நினைக்கும்படியான (வைசூரி, வாந்திபேதி, தேகம் மஞ்சளாய்ப்போகத்தக்க (yellow fever) ஓர்வகைசுரம் அல்லது பெருவாரிபோன்ற) வியாதிகளுக்குச் சிகிச்சைசெய்வதற்காகவும், சாதாரணமாய் யாதொருவியாதிபாகி நிலையான ஆஸ்பத்திரி விடுதிபோதாமையாயிருக்குமாகில் அப்படிப்பட்ட வியாதிக்காகவும், மேல்தட்டில் கொஞ்சகாலத்திற்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்திக்கொள்ளுவதற்கான சாமான்கள் அந்தக்கப்பலில் இருக்கவேண்டும். மேல்தட்டிலே அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகட்ட

வேண்டிய பாரமானது ஸர்வேசெய்கிற உத்தியோகஸ்தர்களால் குறித்துக் காட்டி அளந்துவிடப்படும். அந்த ஆஸ்பத்திரியின் சட்டவேலையானது (சுலபமாய் ஒன்றோடொன்றுசேர்த்து இணைக்கும்படியான துண்டுகளாயிருக்கிற) இரும்பாகவாவதிருக்கலாம், மரச்சட்டங்களாகவாவதிருக்கலாம், மூங்கில்களாகவாவதிருக்கலாம். மேற்கூரையை கூடாரம்போல் போடவேண்டும், அந்தமேற்கூரையும் பக்க அடைப்புகளும் தளமான கித்தான்களால் செய்து பலவேனும் தண்ணீர் ஊராவிராதிருக்கவேண்டும், அப்படிச்செய்கையில் காற்று உலாவுவதற்கு தகுந்த ஏற்பாடும் பண்ணவேண்டியது. தரையின் சதுரஅடி விஸ்தீரணமானது 144 அடிக்குக் குறைந்திருக்கக்கூடாது, அப்படிப்பட்ட தரைதட்டுக்குமேலே குறைந்தது நான்கு அங்குல உயரமிருக்கவேண்டும். தரைக்குப்போடுகிற சாமான் இருப்புத்தகடாயிருந்தால் விசேஷம்.

B.—குறுகியபயணம்செய்கிற கப்பல்கள் விஷயத்தில்.

(c) மேலே (b) குறிப்பிட்ட உட்பிரிவில்கண்டிருக்கிறவிதமான வியாதிகளைப் பரிகரிப்பதற்காக மேற்படி உட்பிரிவில் விவரித்துச்சொல்லியிருக்கிறபடி கொஞ்சகாலத்திற்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்தும்பொருட்டு ஒவ்வொருகப்பலிலும் சாமான்களிருக்கவேண்டியது; ஆனால் அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிக்காக விட்டிருக்கிற சதுரஅடி விஸ்தீரணமானது 72 அடிக்கு மேற்பட்டிருக்கவேண்டியதில்லை. இந்த இடத்தை அப்படிப்பட்ட கப்பலிலிருக்கும் பிரயாணிகளுக்காக அளந்துவிட்டிருக்கிற விஸ்தீரணத்திலிருந்து எப்போதும் கழித்து எடுத்துக்கொள்ளவேண்டியது.

(2) நிலையான ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்பட்டிருக்கிற கப்பல்கள் விஷயத்தில் அந்த ஆஸ்பத்திரியானது பயணக்காரர்களிலே (வைசூரியாலாவது, வாந்திபேதியாலாவது, தேகம் மஞ்சளாய்ப்போகத்தக்க (yellow fever) ஓர்வகைசுரத்தாலாவது, பெருவாரியாலாவது வருந்தும் பிணியாளிகள்தவிர) மற்றபிணியாளிகளுக்கு எப்போதும் உபயோகப்படத்தக்கதாயிருக்கவேண்டும்; மேலே விவரித்துச்சொல்லியிருக்கிற சங்கதிகளைப்பற்றி வேண்டியிருக்கும் போதெல்லாம் வியாதியாயிருக்கும் பயணக்காரர்களின் உபயோகத்திற்காக உடனே கொஞ்சகாலத்திற்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்தி அதை உபயோகப்படுத்தவேண்டியது.

(3) யாதொரு கப்பலின்மாஸ்ட்டர் யாதொரு ஆஸ்பத்திரியை வியாதியாயிருக்கும் பயணக்காரர்களுக்கு உபயோகமாகும்படி செய்யவாவது, செய்யும்படி இந்தவிதியில் சொல்லியிருக்கிறபிரகாரம் கொஞ்சகாலத்திற்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்தவாவது தவறுவாராகில், அவருக்கு இருநூறுரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம் விதிக்கப்படும், மேலும் அப்படி செய்யாமலிருக்கிற முதல்தினத்திற்குப்பின்பு அப்படிச்செய்யாமலிருக்கிற ஒவ்வொருதினத்திற்கு பின்னும் இருபதுரூபாய் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

IV.—(1) அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் இரண்டுகக்கூஸுகளுக்குக் குறையாமல் சித்தஞ்செய்திருக்கவேண்டியது; வெளியிலிருப்பவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாதபடி அவைகளுக்குப் போதுமானமட்டில் அடைப்பு அடைத்திருக்கவேண்டியதுமல்லாமல் அவைகள் எப்போதும் பயணக்காரர்கள் சுலபமாய் உள்ளேபோய் உபயோகப்படுத்திக்கொள்ளத்தக்கவையாயுமிருக்கவேண்டும்; பயணக்காரர்களை நூறுபேருக்கு அதிகமாய் ஏற்றிக்கொண்டுபோகிறதாயிருந்தால், அப்படி அதிகப்படுகிற பிரதி நூறுபேருக்காவது நூற்றுக்குக் குறைந்த எத்தனைபேருக்காவது பின்னுமொரு கக்கூஸிருக்கவேண்டும்; ஆனால் நடுத்தட்டுகளிலே கக்கூஸுகளை அமைக்கவொட்டக்கூடாது.

(2) பயணக்காரர்களுக்குள்ளே யாராவது பெண்டுகளிருந்தால் பயணக்காரர்களுக்குள் புருஷர்களுடைய சங்கியைக்கும் பெண்டுகளுடைய சங்கியைக்கும் என்னதாரதம்மியப்பிரமாணமிருக்கிறதோ அதையநுசரித்து சற்றேறக்குறைய அதற்கேற்ற அளவாக கக்கூஸுகளைப் பெண்டுகளுக்கென்று பிரத்தியேகமாய்ப்பிரித்து ஏற்படுத்தவேண்டியது; எப்படிப்பட்டவிஷயத்திலும் குறைந்தது ஒரு கக்கூஸாவது இருக்கவேண்டியது.

V.—அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் குளிப்பதற்காக இரண்டுஇடங்களுக்குக் குறையாமல் இடங்களைஏற்படுத்தி, வெளியிலிருப்பவர்களுக்குப் புலப்படாதபடி போதுமான அடைப்படைத்து, பயணக்காரர்களுக்கு உபயோகப்படத்தக்கவையாயிருக்கவேண்டும்; அவற்றில் நான்காவதுவிதியிலே விவரித்துச் சொல்லியிருக்கிறபடி பூர்த்தியான அளவுக்கு ஸ்திரீகளுக்கென்றே பிரத்தியேகமாய் இடம்விட்டிருக்கவேண்டும். நீர்ஜாம்பும் கைக்கருவிகள் எத்தனைபோதுமோ அத்தனையும் குளிக்கும்பொருட்டு கடல்நீர் சவதரிப்பதற்காக சேகரித்துவைத்திருக்கவேண்டும்.

VI.—அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் பயணக்காரர்களுக்கு எவ்வளவேனும் சங்கடமுண்டாகாதபடி, ஆடு மாடுகளைப் பத்திரமாய் அடைப்படைத்திருக்கிற இடத்தில் வைத்திருக்கவேண்டும்.



VII.—(1) அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் தட்டின்மேல் கிரமமாய் வீடுபோலாக்கி மேலே மூடியிருக்கிற மடைப்பள்ளிஅடுப்புவரிசைகள் இரண்டிற்குக்குறையாமல் ஏற்படுத்தி வைத்திருக்கவேண்டும்; அவ்விடத்திற்கு பயணக்காரர்கள் ஒவ்வொருநாளும் குறித்த காலங்களில் தடையின்றிப்போவதற்குத் தகுந்தவையாயிருக்கவேண்டும். இந்தவரிசைகள் குறைந்தது தட்டுக்கு நான்கு அங்குல உயரத்துக்குமேலே உள்ளே செங்கல்கட்டடம்கட்டி மேலே உறுதியான இரும்புத்தகடுமூடி, மேலே புகைவெளிப்பட்டுப்போவதற்காகப் புகைக்கூண்டு வைத்திருக்கவேண்டும். ஒவ்வொருவரிசையிலே குறைந்தது ஐந்து சமையலிடங்களிருக்கவேண்டும்; நூற்றுக்கதிகமாக ஏற்றிக்கொண்டுபோகப்பட்டபிரதி இருநூறு பயணக்காரர்களுக்கும் ஜாஸ்தியாக ஒவ்வொருவரிசை ஏற்படுத்தவேண்டும். கப்பலிலே பயணக்காரர்களின் சொந்த தாளிவகையராவில் சமையல்செய்வதுகூடாது; எந்த பயணக்காரனாவது அப்படி சமையல்செய்தாலும் சமையல்செய்ய எத்தனப்பட்டாலும் அப்படிப்பட்டவனுக்கு நூறுரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படும்.

(2) பயணக்காரர்கள் கப்பலிலிருக்கிறகாலம்வரையிலே பயணக்காரர்களுக்காகப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கிற சமையல் வரிசைகளை உபயோகித்துக்கொள்ள கப்பலாள்களுக்கு அநுமதி கொடுக்கக்கூடாது; ஆனால் அவர்களுக்குப் பிரத்தியேகமான சமையல்வரிசை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

(3) கோஸ்தாவியாபாரத்தில் அமர்ந்திருக்கிற கப்பல்கள் கப்பலில் சாதாரணமாய்ச்சமையல்செய்யாத பயணக்காரர்களை ஏற்றிக்கொண்டு ஒருரேவிலிருந்து மற்றொருரேவுக்குக்குறுகிய பயணம்போகிறவிஷயத்தில் சமையல்செய்யும்வரிசைகளை இரண்டுக்குக்குறையாமல், பயணக்காரர்களுக்குப் போதுமானதாகத் தோற்றும்அளவுக்குக் குறைத்துப்போடலாம்.

VIII.—யாதொரு கப்பலின் மாஸ்ட்டரானவர் யாதொரு கக்கூஸையாவது குளிக்கிற இடத்தையாவது சமையல்வரிசையையாவது பயணக்காரர்களுக்கு உபயோகமாகும்படி செய்யாமையினாலாகிலும் ஆடுமாடுகளை அடைப்படைத்து பத்திரப்படுத்தாமையினாலாகிலும், பயணக்காரர்களுக்காகப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கிற யாதொரு சமையல் வரிசையை உபயோகப்படுத்தக் கப்பலாள்களுக்கு அநுமதிகொடுப்பதினாலாகிலும் மேற்படி விதிகளை மீறி நடப்பாராகில், அப்படிப்பட்டவருக்கு இருநூறுரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம்விதிக்கப்படும்; மேலும் விடாமல் அப்படி மீறிக்கொண்டேயிருக்கும்பட்சத்தில், அப்படிமீறுகிற முதல்தினத்திற்குப்பின்பு அவ்வாறு மீறிக்கொண்டேபோகிற ஒவ்வொரு தினத்திற்கு இன்னும் இருபதுரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

C.—படகுகளும், நங்கூரங்களும், அமார்க்கயறுகளும்.

IX.—அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் பின்னால்சேர்த்திருக்கிற ஷெட்யூலில் கண்டிருக்கும் அளவுபடிக்கு படகுகள் சேகரித்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட படகுகளுக்கெல்லாம் வழக்கமான சகல உபகரணங்களும் பூர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

படகின்வசதியைப்பற்றிய ஷெட்யூல்கள்.

| கப்பலின் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட டன் பாரம். | இவ்வளவுக்குக் குறைவுபடாமல் படகுகளின் சங்கியை. | பாய்விரித்தோடுகிற மரக்கலங்கள். | | நீராவியாற்செல்லும் மரக்கலங்கள். | |
|---|---|---|---|---|---|
| | | ஜீவரட்சணப்படகுகளின் குறைந்தகன அளவு. | கப்பலின் எல்லாப்படகுகளின் குறைந்தகன அளவு. | ஜீவரட்சணப்படகுகளின் குறைந்தகன அளவு. | கப்பலின் எல்லாப்படகுகளின் குறைந்தகன அளவு. |
| | | அடி. | அடி. | அடி. | அடி. |
| 200 டன்னுக்குக் குறைந்தது ... | 2 | 90 | 236.4 | 138 | 368·4 |
| 200 டன்னும் 400 டன்னுக்குக் குறைந்ததும். | 3 | 120 | 427·2 | 181·2 | 657 |
| 400 ஷை 600 ஷை | 4 | 150 | 723 | 198 | 877·2 |
| 600 ஷை 800 ஷை | 5 | 198 | 1,038 | 198 | 1,038 |
| 800 ஷை 1,000 ஷை | 5 | 240 | 1,227 | 240 | 1,227 |
| 1,000 ஷை 1,250 ஷை | 6 | 540 | 1,527 | 540 | 1,527 |
| 1,250 ஷை 1,500 ஷை | 6 | 540 | 1,800 | 540 | 1,800 |
| 1,500 ஷை அதற்குமேற்பட்டது. | 7 | 556·8 | 2,160 | 556·8 | 2,160 |

200 டன்னும் அதற்குமேற்பட்ட அளவுமுள்ள கப்பல்களில் கனஅடி 90க்குக் குறைந்தபடகைக் கணக்கில் சேர்க்கலாகாது.

600 டன்னும் அதற்குமேற்பட்ட அளவுமுள்ளகப்பல்களிலே படகுகளிலிரண்டு ஜீவரட்சணப் படகுகளாயிருக்கவேண்டும்.

கப்பலிலிருக்கிற சகல கப்பலாள்களையும் பயணக்காரர்களையும் ஏற்றிக்கொண்டுபோவதற்குப் போதுமானதைவிட அதிகமாய்ப்படகுகளைக் கொண்டுபோகவேண்டுவதில்லை.

மேலேகண்டிருக்கிற அட்டவணையிலுள்ள படகுகளின் கனஅளவை அறியவேண்டிய தெப்படியென்றால்:—அவைகளின் வெளிப்புறத்து நிகளத்தையும் வெளிப்புறத்து அகலத்தையும் உட்புறத்து ஆழத்தையும் ஒன்றோடொன்று பெருக்குவதால் வருகிறதொகையை 0·6 இதனால் பெருக்கிவருகிற தொகையே கனஅடி என்றறிக.

X.—அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் நங்கூரங்களும் அமார்க்கயிறுகளும் மூன்றுக்குக் குறையாமல் சவதரித்திருக்கவேண்டும்.

D—கப்பல்பிரயாணத்திற்கு வேண்டியகருவிகள்.

XI.—அப்படிப்பட்ட பிரதிகப்பலிலும் அடியிற்கண்டவைகளைச் சவதரித்திருக்கவேண்டும் :—

(a) இரண்டுக்குக்குறையாத நல்லகாம்பாஸ் என்னும் திசையறிகருவிகள் இருக்கவேண்டும். இருப்புக்கப்பலாயிருந்தால் அதிலுள்ள திசையறிகருவிகள் அந்தந்த திசையைப்பற்றி வித்தியாசப்படுகிறதை (log-book) கப்பலோட்டத்தின் கணக்குபுஸ்தகத்தில் எழுதிவைக்கவேண்டும் ;

(b) கப்பல் போக எத்தனமாயிருக்கிற பயணத்துக்குத்தகுந்த படங்கள் இருக்கவேண்டும் ;

(c) ஒன்றுக்குக்குறையாமல் (chronometer) க்ரானமீட்டர்என்னும் கருவியும், இரண்டுக்குக்குறையாமல் (sextant) ஸெக்ஸ்டென்ட்என்னும் கருவிகள் அல்லது (quadrant) க்வாட்ரென்ட்என்னும் கருவிகளும், (barometer) பாரமிட்டர் என்னும் கருவிகளும் இருக்கவேண்டும் ; ஆனால் கப்பலின்காத்திரம்240 டன்னுக்குட்பட்டிருந்து, குறுகிய பயணம்போகிறதாயிருந்தால், ஒரு ஸெக்ஸ்டென்ட் என்னும் கருவியாவது ஒரு க்வாட்ரென்ட் என்னும் கருவியாவது இருப்பதேபோதுமானது.

E.—தீயவிப்பதற்காகவும் தீவைப்பற்றிய முன்ஜாக்கிரதைக்காகவும் வேண்டிய கருவிகள்.

XII.—அப்படிப்பட்ட பிரதி கப்பலிலும் அடியிற்கண்டவைகளைச் சவதரித்திருக்கவேண்டும் :—

(a) நீராவிக்கப்பலாயிருந்தால், அதனுடைய எந்திரங்களிடத்திலிருந்து அதனுடைய (stem) முன்னணியத்துக்கும் (taffrail) பின்னணிமேல்பக்கத்துக்கும் எட்டுவதற்குப் போதுமான அளவுள்ள நீர்தூவுந்துருத்தி ;

(b) பாய்விரித்தோடும் கப்பலாயிருந்தால், அதனுடைய முன்னணியம்முதல் பின்னணி மேல்பக்கம்வரையில் எட்டுவதற்குப் போதுமான அளவுள்ள நீர்தூவுந் துருத்தியோடுகூட தீயவிக்கும் எந்திரமாவது நீர்ஜாம்பும் எந்திரமாவது ஒன்று ; அதனுடைய டன் பாரம் 800க்கு மேற்பட்டிருந்தால் அவ்விதநீர்தூவுந் துருத்தியோடுகூட அப்படிப்பட்ட இரண்டாவது எந்திரமாவது நீர்ஜாம்பும் எந்திரமாவது ;

(c) நீராவிக்கப்பல்களும் பாய்விரித்தோடும் கப்பல்களுமாகிய இவ்விரண்டின் விஷயத்திலும் 600 டன்வரையிலே பிரதி 100 டன்னுக்கு மூன்றுவீதம் தீயவிப்பதற்கான நீர்த்தொட்டிகளும் 600 டன்னுக்கு மேற்பட்டு பிரதி 100 டன்னுக்கு இரண்டுவீதம் மேற்படி நீர்த்தொட்டிகளும். ஆனால் மொத்தத்தில் 50 இருந்தால் போதுமானது.

XIII.—தீயணைக்கும் கருவிகளாவது தீயவிக்கும் எந்திரங்களாவது கொண்டுபோகப்படுமாகில், அவற்றை மாஸ்டரானவர் முக்கியமாய்க் கப்பலின் பிரதான உத்தியோகஸ்தர்களில் ஒருவரும் கப்பல் தச்சமேஸ்திரியும் ஆகிய இவர்களுடையவசத்தில் வைத்திருக்கவேண்டும் ; அவர்கள் நீர்த்தொட்டிகளோடும் மற்ற தீயவிக்கும் கருவிகளோடுங்கூட அவற்றைத் தட்சணம் உபயோகிப்பதற்கான தகுந்த ஸ்திதியிலே சித்தமாய் வைத்திருப்பதற்கு உத்தரவாதிகளாயிருக்கவேண்டும். எந்திரத்தை வாரத்தில் ஒருதடவைக்குக் குறையாமல் கையாண்டுபார்த்து ஒழுங்கான ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும். ரேவைவிட்டுப்போன பின்பு கூடுமானசீக்கிரத்திலே உத்தியோகஸ்தர்களையும் கப்பலோட்டிகளையும் துக்குடித்துக்குடியாய்ப் பிரித்து தீப்பிடித்தால் இன்னின்ன துக்குடி இன்னின்ன இடத்திலிருக்கவேண்டியதென்று ஏற்பாடுசெய்யவேண்டும். அப்படிப்பட்ட யாதொரு கப்பலின் மாஸ்டரானவர் இந்தவிதியில் சொல்லியிருக்கிறபடி நடந்துகொள்ளத் தவறிப்போனால், அப்படிப்பட்டவருக்கு இருநூறுரூபாயளவுக்கு ஏறத்தக்க அபராதம் விதிக்கப்படும்.

XIV.—அப்படிப்பட்ட பிரதிகப்பலின் சரக்கை ரேவைவிட்டுப்போவதற்கு முன்னமே சீராய் உள்ளே சேர்த்துவைத்து, தட்டுகளின்மேல் விடுதி வைக்கோலாவது, உலர்ந்த புல்லாவது, பற்றிக்கொள்ளத்தக்க வேறே வஸ்துவையாவது போட்டுவைக்காமல் பரிஷ்காரம் பண்ணிவைக்கவேண்டும். சரக்குகளை அப்படி உள்ளே சேர்த்துவைக்காமலும் தட்டுகளை அந்தப்படி பரிஷ்காரம்பண்ணிவைக்காமலும் அப்படிப்பட்ட யாதொரு கப்பல் ரேவைவிட்டுப்போகுமாகில், மாஸ்டருக்கு இருநூறுரூபாயளவுக்குஏறத்தக்க அபராதம் விதிக்கப்படும்.

XV.—ரேவைவிட்டுப் போவதற்குமுன்பு அடுத்தாற்போல, அப்படிப்பட்ட பிரதிகப்பலிலுள்ள பயணக்காரர்களை ஏதாவது தீக்குச்சாவது அப்பாக்கி மருந்தாவது பற்றிக்கொள்ளத்தக்க வேறே வஸ்துக்களாவது தங்களிடத்தில் வைத்துக்கொண்டிருந்தால் அவைகளை ஒப்பித்துவிடச்சொல்லவேண்டும். அப்படிப்பட்ட எந்த வஸ்துக்களையாவது ஒப்பித்து

2 ... 379-28-5-90 ...

No 1815

Proceedings of the Board of Revenue
(Land Revenue)

Dated 17th March 1890
No 1790 Mis
Mr H. W. Bliss

Resolution:—

The Board begs to draw the attention of Government to the translation of the list of drugs on page 9-15 of the Ganjam Gazette, January 1890. The work was done by the Government translator. The translation of the names of several of the drugs given in the list must be passable. It will, however, be noticed that in most cases the English names are simply transliterated, "powder" being given as పౌడర్, "calomel" as కాలొమెల్ "sanitary" శానిటరి etc. The Board thinks some better attempt might have been made to make the translation intelligible. Several of the medicines must more or less be commonly used by native doctors.

(True Extract)

Sd/ M. Hammick
Secretary

To
The Secy. to Govt. R.D.

Public Cir. 1315
( 1890. )

REVENUE DEPARTMENT.

No. 2175

**From**

The Board of Revenue
(Land Revenue)

UNDER SECRETARY
1 MAY 90
PUBLIC ETC DEPTS

Dated 17th March 1890

Received 18th March

Enclosures --

No. 1790 Mis

SUBJECT.

Drawing the attention of Government to the translation of the list of drugs in the Ganjam Gazette (January 1890)

ABSTRACT.

Endorsement No 2525

Transferred to the Public Department

Ootacamund 28th April 1890 } Secretary to Government

The Tamil Translation gives Tamil words for most of the medicines, & translations of English names Eg. Jeyes perfect purifier. Analis Hydrarg. cum Creta, Pulvis Cretae cum Opio &c.

C. No. 1315/90

For orders whether any reference is to be made to the Telugu translator. He will probably defend himself & matters will not be helped.

2. It is by no means certain that Dr. Oppert is not right. The fact that there are Telugu words corresponding to the English words which have been reproduced in the translation is not in itself a proof that they should be used. The Tamil version of the list has been referred to, and in it, while Tamil substitutes are given for the words "calomel" & "Sanitary", the word "powder" is simply transliterated in each case. Tamil-speaking clerks who have been ~~askedwhether~~ questioned say that they would, if asking for any of

drugs, employ by preference the word "powder", in combination with "rhubarb" "jalap" &ca. as it is well known (in such combinations) in native bazaars.

3. The Board appear to ignore the process by which English words pass into the languages of India. It is really not a matter of transliterating but of using modern Tamil or Telugu words borrowed from the English tongue.

4. As to "Sanitary", whether or not that word has so passed into the languages of India, it must at any rate be in the transitory stage, what with "Sanitary" Commissioners & Engineers & Inspectors & grants, and the much talk about it in every Municipality.

5. It has to be remembered that there is still a Munshi in the office of the Telugu translator, and that he is likely to ~~have~~ be originally responsible for much of what has disturbed the Board. He is probably the best judge on such a point.

6. The responsibility, however, in matters of this kind should, it is submitted, be allowed to rest with the paid Translator. A Member of the Board or a Member of Government may be more competent than the paid Translator of a language to express an opinion on the merits of a word, but it would in practice be found inconvenient to supervise the Translators' work, even if it were possible to do so at all times.

Submitted that the present Commn. be

Recorded.

In the Tamil too 'Rhubarb powder' is simply transliterated. JHG

I think it is very good that they should be pulled up occasionally & then when somebody takes the trouble to point out faults, this should be done. The Telugu translation referred to is not first-rate but I think [illegible] is beastly; seeing that there is a good Tel. word as is [illegible].
I would communicate the Bd. Proc. to the Tel. Translator.

JHG 21/5/90

Ws
to the Tamil T. too

DESPATCHED JUN 90

Order:- 26 May/90 No. 375
The Resolution of the Board of Revenue will be communicated to the Telugu Translator & also to the Tamil Translator to Govt.

*Translation of the list of drugs.*

WITH ORDER

READ AGAIN ORDER OF GOVERNMENT, DATED
18 , No. , MISCELLANEOUS.

FURTHER PAPER, No. of 18

ENCLOSURES.

*Petn. of Rev. (Chinese) ...*
*Chinese Translator to Gov.*
*Tamil Translator to Gov.*

*copy 4/6*

CURRENT No. *1315*

*p a a*

*desp^d 6/6*

STATEMENT WITH DITTO.

ORDER OF GOVERNMENT. A A A

STATEMENT WITH DITTO.

PAPERS NOT FILED UP, BEING MEANT FOR DESPATCH IN ORIGINAL (not paged).

*N.B.*—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.